சுருக்கம்

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு 2013–14 ஆம் ஆண்டிற்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்குதல் ரூ.4.42 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சந.4–1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.98

நாள்.06.11.2013.
திருவள்ளுவர் ஆண்டு 2044
ஐப்பசி மாதம் 20ம் நாள்

படிக்கப்பட்டவை:-

1. அரசு ஆணை (நிலை) எண். 109, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை, நாள் 11–05–2012.
2. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.24559/சஉதி(தி.1), நாள்.10.10.2013.

---

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் இராமநாதபுரம், அரியலூர், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 7,367 மாணவ/ மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்க 2012–2013 ஆம் ஆண்டிற்கு ரூ.4.42 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) தற்போது புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் சத்துணவு மையங்களில் உள்ள 7,367 பயனாளிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கிட ஒரு பயனாளிகளுக்கு ரூ. 60/– வீதம் இவ்வாண்டு ரூ.4.42 இலட்சம் ஒப்பளிப்புக் கோரி சமூக நல இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

// த.பி.பா. //

| வ.எண். | மாவட்டம் | தட்டு மற்றும் டம்ளர் வழங்க பரிந்துரைக்கப்படும் பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சென்னை | 1475 |
| 2. | கரூர் | 1473 |
| 3. | தேனி | 1473 |
| 4. | கிருஷ்ணகிரி | 1473 |
| 5. | சேலம் | 1473 |
| | மொத்தம் | 7367 |

3) சமூக நல இயக்குநரின் கருத்துருவை பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, மேலே பத்தி 2ல் தெரிவிக்கப்பட்டுள்ள 5 மாவட்டங்களில் உள்ள பள்ளி சத்துணவு மையங்களில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 7,367 மாணவ/மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்க 2013–2014 ஆம் ஆண்டிற்கு ரூ.4.42 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

4) மேலே பத்தி 3 – ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2236– சத்துணவு 02– சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102–மதிய உணவு–I திட்டத்தில் சேராதது AX– புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் சமையல் பாத்திரங்களை மாற்றுதல் – 24 பொருள்களும் வழங்கலும் "

(த.தொ.கு.2236–02–102–AX–2408)

5) மேலே பத்தி 3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 7,367 மாணவ, மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க தேவைப்படும் நிதியை தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்து அளிக்கவும், இத்திட்ட செயலாக்கத்தை கண்காணிக்கவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

6) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி, 2013–14ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

225

7) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.கு. எண்.62226 / நிதி (சந) / 2013, நாள். 31.10.2013ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.மு.பஷீர் அஹமது,
அரசு செயலாளர்.

பெறுநர்.

சமூக நல இயக்குநர், சென்னை–2.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு)
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை/கோவை.
உதவி சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–3
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/9/18/35.

நகல்

நிதி (சந)த் துறை, சென்னை–600 009 (2 நகல்கள்)
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை–25.
இ.கோ/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

226